| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

**Part III**

# இந்திய பண்பாடு
# INDIAN CULTURE

( New Syllabus )

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

I. **எல்லா** வினாக்களுக்கும் விடையளி.

அ. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் 10 × 1 = 10

1. முதன் முதலில் தோன்றிய வேதம்

அ) ரிக் வேதம் ஆ) யஜூர் வேதம்

இ) சாம வேதம் ஈ) அதர்வண வேதம்.

2. நிஷ்கா என்பது

அ) வெள்ளி நாணயம் ஆ) படகு

இ) தங்க நாணயம் ஈ) வளையல்கள்.

3. தமிழிசைக் கல்லூரியை நிறுவியவர்

அ) பாரதிதாசன்

ஆ) பாரதியார்

இ) வ.உ. சிதம்பரனார்

ஈ) ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்.

[ Turn over

4. ஆயுர் வேதத்தின் ஆசிரியர்

அ) ஹர்ஷர் ஆ) திருமூலர்

இ) நாகர்ஜுனர் ஈ) அஷ்வகோஷர்.

5. மூன்று இரத்தினங்களைப் பற்றி கூறும் சமயம்

அ) இந்து சமயம் ஆ) இஸ்லாம்

இ) புத்தம் ஈ) சமணம்.

6. நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தைத் தொகுத்தவர்

அ) நாதமுனிகள் ஆ) நம்பியாண்டார் நம்பி

இ) சேக்கிழார் ஈ) நாமதேவர்.

7. குமார சம்பவத்தின் ஆசிரியர்

அ) கம்பர் ஆ) ஜெயங்கொண்டார்

இ) ஆரியபட்டர் ஈ) காளிதாசர்.

8. இஸ்லாமியர்களின் புனித நூல்

அ) பைபிள் ஆ) குரான்

இ) இராமாயணம் ஈ) ஆதிகிரந்தம்.

9. இராமானுசரின் தத்துவம்

அ) அத்வைதம் ஆ) விசிட்டாத்வைதம்

இ) துவைதம் ஈ) சைவ சித்தாந்தம்.

10. சத்தியார்த்த பிரகாசம் என்ற நூலின் ஆசிரியர்

அ) இராஜா ராம்மோகன் ராய் ஆ) விவேகானந்தர்

இ) தயானந்த சரஸ்வதி ஈ) துளசிதாசர்.

ஆ. கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க : 10 × 1 = 10

11. கொல்லாமை என்பதே ...................... ஆகும்.

12. புராணங்களைத் தொகுத்தவர் ......................... ஆவார்.

13. ......................... உலகத்தின் தலைசிறந்த மொழிகள் அனைத்திலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

14. சமண சமயத்தின் இரு பிரிவுகள் ........................... மற்றும் ...............................ஆகும்.

15. இந்து மதத்திற்கு .......................... என்ற வேறு பெயரும் உண்டு.

16. முத்திராராட்சசத்தை எழுதியவர் .......................... ஆவார்.

17. கிறிஸ்துவர்களின் வேதநூல் .......................... ஆகும்.

18. வீரசைவம் எனப்படும் உயரிய நெறியை நிறுவியவர் .......................... ஆவார்.

19. இராமகிருஷ்ண இயக்கத்தை நிறுவியவர் .......................... ஆவார்.

20. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் ஒன்று சேருமிடம் ....................... ஆகும்.

இ. பின்வருவனவற்றைப் பொருத்துக : 10 × 1 = 10

| | | | |
|---|---|---|---|
| 21. | சத்தியம் | அ) | துதிப்பாடல்கள் |
| 22. | சம்ஹிதைகள் | ஆ) | பௌத்த காப்பியஙக்ள் |
| 23. | மனோகரா | இ) | சங்கரதாஸ் சுவாமிகள் |
| 24. | வளையாபதி, குண்டலகேசி | ஈ) | உண்மை |
| 25. | திருமந்திரம் | உ) | பம்மல் சம்பந்த முதலியார் |
| 26. | சத்தியவான் - சாவித்திரி | ஊ) | திருமூலர் |
| 27. | சாக்கிய முனி | எ) | சீவக சிந்தாமணி |
| 28. | வானவியல் | ஏ) | மகேந்திரவர்மன் |
| 29. | திருத்தக்க தேவர் | ஐ) | ஆரியபட்டர் |
| 30. | மத்தவிலாசப் பிரகசனம் | ஒ) | புத்தர். |

[ Turn over

ஈ) பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி 15 × 1 = 15

31. பண்பாடு - வரையறு.

32. இந்தியா இன அருங்காட்சியகம் என்று கூறியவர் யார் ?

33. இந்தியாவின் இருபெரும் இதிகாசங்கள் யாவை ?

34. சிந்து சமவெளி நாகரிக இரு நகரங்கள் யாவை ?

35. ஸ்மிருதி என்றால் என்ன ?

36. உபநிடதம் என்றால் என்ன ?

37. சமிதி என்றால் என்ன ?

38. முத்தமிழாவன யாவை ?

39. திருவாசகத்தின் ஆசிரியர் யார் ?

40. புத்த சமயத்தின் இரு பிரிவுகள் யாவை ?

41. மூன்று முக்கிய வேதாந்தங்கள் யாவை ?

42. திரிபீடகம் என்றால் என்ன ?

43. சமணர்கள் இயற்றிய இரு நூல்கள் பெயரினைக் குறிப்பிடுக.

44. அர்த்த சாஸ்திரத்தின் ஆசிரியர் யார் ?

45. பக்தியின் இரு வகைகள் யாவை ?

## பகுதி - ஆ

II. எவையேனும் **பதினைந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகட்கு மிகாமல் விடையளி : 15 × 3 = 45

46. பண்பாடு பற்றிய E.B. டெய்லரின் கருத்து யாது ?

47. நாகரீகம் என்றால் என்ன ?

48. சமய ஒற்றுமையினை விளக்குக.

49. சிந்து சமவெளி மக்களின் எழுத்து முறை பற்றி விளக்குக.

50. சுருதி என்றால் என்ன ?

51. சபா என்றால் என்ன ?

52. திருக் கோயில்கள் சமய, பண்பாட்டு கல்வி மையங்கள் - விளக்குக.

53. இயற்றமிழ் என்றால் என்ன ?

54. இந்துக்களின் அறுவகைச் சமயங்கள் யாவை ?

55. மகாவீரர் போதித்த உண்மைகள் யாவை ?

56. அத்வைதம் என்றால் என்ன ?

57. பாண்டியர் கால கலையின் சிறப்பு அம்சங்களைக் குறிப்பிடுக.

58. குடவோலை முறை என்றால் என்ன ?

59. இஸ்லாம் என்ற சொல்லுக்குப் பொருள் தருக.

60. கிறிஸ்துவம் என்றால் என்ன ?

61. பக்தியினை வரையறு.

62. விசிட்டாத்வைத நெறியினை விளக்குக.

63. அன்னி பெசன்ட் பற்றி குறிப்பு தருக.

64. இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்கு ஆரிய சமாஜம் ஆற்றிய பணியினை விளக்குக.

65. பஞ்சசீலக் கொள்கைகளை விளக்குக.

## பகுதி - இ

III. எவையேனும் **பத்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகட்கு மிகாமல் விடையளி : 10 × 6 = 60

66. பண்பாட்டுக் கல்வியின் பயன்களை விவரி.

67. சிந்து சமவெளி மக்களின் பொருளாதார நிலையினை விளக்குக.

68. சிந்து சமவெளி மக்களின் கட்டடக் கலை பற்றி நிவீர் அறிவது யாது ?

69. புராணங்களின் இன்றியமையாமையை விவரி.

70. ரிக் வேத கால அரசியல் நிலையினை விளக்குக.

71. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடக வளர்ச்சி பற்றி விளக்குக.

72. இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழகத்தின் கொடையினை விளக்குக.

73. புத்த சமயத்தின் நான்கு உயரிய உண்மைகளை விளக்குக.

74. சோழர்களின் அரசாட்சி முறையினை விளக்குக.

75. பல்லவர்களின் கட்டடக் கலைப் பாணியினை விளக்குக.

76. இந்தியப் பண்பாட்டிற்கு இஸ்லாம் சமயத்தின் கொடையினை விளக்குக.

77. கிறிஸ்துவ சமயக் கோட்பாடுகளை விளக்குக.

78. குரு நானக் பற்றி குறிப்பு தருக.

79. இந்தியப் பண்பாட்டிற்கு ஆரிய சமாஜம் ஆற்றிய தொண்டினை விளக்குக.

80. சுற்றுப்புறச் சூழலில் மாணவர்களின் பங்கினை விளக்குக.

## பகுதி - ஈ

IV. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்க அளவில் விடையளி:
$5 \times 10 = 50$

81. பண்பாட்டு ஒற்றுமையைப் பேணி வளர்க்கத் துணைபுரிந்த காரணிகளை விளக்குக.

82. இந்தியப் பண்பாட்டிற்கு சமண சமயம் ஆற்றிய தொண்டினை விளக்குக.

83. மௌரியர்கள் இந்தியப் பண்பாட்டிற்கு ஆற்றிய தொண்டினை விளக்குக.

84. சைவ நாயன்மார்களின் சமயத்தொண்டினை விளக்குக.

85. மகாத்மா காந்தியின் வாழ்க்கையையும் அவரது தத்துவங்களையும் விளக்குக.

86. உலகப் பண்பாட்டிற்கு இந்தியாவின் கொடை பற்றி விளக்குக.

87. இந்தியச் சுற்றுச் சூழல் குறித்து கட்டுரை வரைக.